## திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறைகள்
## முன்னிலை– திரு.மா.பரமேஸ்வரன்.,

செ.மு.எண்.தா3 / 1607/2025–5 நாள்.24.07.2025

பொருள் பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை எண் – 01/2024 – போட்டித்தேர்வு தொகுதி – IV இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவி – பணி நாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டது – பணி நியமனம் அளிக்கப்பட்டது – பணியில் சேர்ந்து கொண்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தல் மற்றும் தகுதி காண் பருவம் துவக்குதல் – ஆணை வெளியிடுதல்.

பார்வை
1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு சென்னை கடித எண்.327/PSD-D3/2025. நாள்.27.02.2025
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின் செயல்முறைகள் ந.க.தா3/1607/2025–6, நாள்.27.06.2025.
3. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அவர்களின் கடித ந.க.தா3/1607/2025, நாள்.27.04.2025.
4. உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி கடித ந.க.எண்.000006/அ4/2024, நாள்.27.06.2025.
5. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

–..–

உத்தரவு –

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு (அறிவிக்கை எண்–01/2024) தொகுதி IV-ன் கீழ் தேர்வு செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு, இளநிலை உதவியாளர் நிலையிலான பணியிடத்திற்கு, ஒதுக்கீடு செய்யப்பட்டு தெரிவு பட்டியல் பார்வை 1–ல் காணும் கடிதம் வழி வரப்பெற்றதனைத் தொடர்ந்து, பார்வை 2–ல் காணும் செயல்முறைகளின்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இவருக்கெதிரே கலம் (4) – ல் கண்டுள்ள நாளில் இவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி பத்திகளின் விதி 32(a)(i)–இன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை துவக்கியும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

(த.பி.பா)